19-05-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 15.12.1999

## சங்கல்ப சக்தியின் மகத்துவத்தை அறிந்து அதை அதிகப்படுத்துங்கள் மற்றும் பயன்பாட்டில் (பிரயோகத்தில்) கொண்டு வாருங்கள்

இன்று உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை தன்னுடைய நாலாபுறங்களிலும் உள்ள சிரேஷ்ட மான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். ஏனென்றால், முழு உலகத்தினுடைய ஆத்மாக்களை விட குழந்தைகளாகிய நீங்கள் சிரேஷ்டமானவர்கள் அதாவது உயர்வானவர்கள் (ஹையஸ்ட்) ஆவீர்கள். உலகத்தினர், உலகத்திலேயே உயர்வானவர்கள் (ஹையஸ்ட் இன் த வேர்ல்டு) என்று கூறுகின்றார்கள், அதுவும் ஒரு ஜென்மத்திற்காக, ஆனால், குழந்தைகளாகிய நீங்கள் கல்பத்திலேயே உயர்வானவர்கள், சிரேஷ்டமானவர்கள் ஆவீர்கள் (ஹையஸ்ட் சிரேஷ்ட இன் தி கல்பா). முழு கல்பத்தில் நீங்கள் சிரேஷ்டமானவர்களாக இருக்கின்றீர்கள். அறிவீர்கள் அல்லவா? தன்னுடைய அனாதி காலத்தைப் பாருங்கள், அனாதி காலத்திலும் கூட ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் தந்தைக்கு அருகாமையில் இருக்கக் கூடியவர்கள் ஆவீர்கள். பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்களா! அனாதி ரூபத்தில் தந்தையின் கூடவே சமீபமாக இருக்கக் கூடிய சிரேஷ்டமான ஆத்மாக்கள் ஆவீர்கள். இருப்பதோ அனைவரும், ஆனால், உங்களுடைய இடம் மிகவும் சமீபமாக உள்ளது. எனவே, அனாதி ரூபத்திலும் கூட உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள் ஆவீர்கள். பிறகு, ஆதி காலத்திற்கு வாருங்கள், அனைத்து குழந்தை களும் தேவ பதவியில் தேவதை ரூபத்தில் உள்ளீர்கள். தன்னுடைய தெய்வீக சொரூபம் நினைவு உள்ளதா? ஆதிகாலத்தில் சர்வ பிராப்தி சொரூபமாக இருக்கின்றீர்கள். உடல், மனம், செல்வம் மற்றும் மக்கள் ஆகிய நான்கு சொரூபத்திலுமே சிரேஷ்டமானவர்களாக இருக்கின்றீர்கள். சதா சம்பன்னமாக உள்ளீர்கள். சர்வ பிராப்தி சொரூபமாக இருக்கின்றீர்கள். அப்பேற்பட்ட தேவ பதவி வேறு எந்த ஆத்மாக்களுக்கும் கிடைப்பதில்லை. தர்ம ஆத்மாக்களாகட்டும், மகாத்மாக்களாகட்டும், ஆனால், இப்பேற்பட்ட சர்வ பிராப்திகளில் சிரேஷ்டமானவர்களாக, அபிராப்தியின் பெயர் அடையாளம் இல்லாதவர்களாக, வேறு எவரும் அனுபவம் செய்ய முடியாது. பிறகு மத்திய காலத்திற்கு வாருங்கள், மத்திய காலத்திலும் கூட ஆத்மாக்களாகிய நீங்கள் பூஜைக்குரியவர்கள் ஆகின்றீர்கள். உங்களுடைய ஜடச் சித்திரங்கள் பூஜிக்கப்படுகின்றன. எந்தவொரு ஆத்மாவிற்கும் அப்பேற்பட்ட விதிப்பூர்வமான பூஜை நடைபெறுவதில்லை. பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு விதிப் பூர்வமான பூஜை நடைபெறுகிறது. அப்படிப்பட்ட விதிப்பூர்வமான பூஜை வேறு எவருக்கும் நடைபெறுகிறதா என்பதை சிந்தித்திடுங்கள். ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடைபெறுகிறது, ஏனென்றால், கர்மயோகி ஆகின்றீர்கள். எனவே, பூஜை கூட ஒவ்வொரு கர்மத்திற்கும் நடைபெறு கிறது. தர்ம ஆத்மாக்களை அல்லது மகான் ஆத்மாக்களை கோவிலிலும் வைக்கின்றார்கள், ஆனால், விதிப்பூர்வமான பூஜை நடைபெறுவது இல்லை. எனவே, இடைகாலத்தில் கூட ஹையஸ்ட் அதாவது உயர்வானவர்கள் ஆவீர்கள். பிறகு, நிகழ்கால இறுதி சமயத்திற்கு வாருங்கள், இறுதி காலத்திலும் கூட இப்பொழுது சங்கமயுகத்தில் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். என்ன சிரேஷ்டதன்மை

உள்ளது? சுயம் பாப்தாதா, பரமாத்ம ஆத்மா மற்றும் ஆதி ஆத்மா அதாவது பாப்தாதா இருவரின் மூலம் பாலனையும் பெறுகின்றீர்கள், படிப்பும் படிக்கின்றீர்கள், கூடவே சத்குரு மூலம் ஸ்ரீமத்தைப் பெறுவதற்குரிய அதிகாரி ஆகின்றீர்கள். ஆகவே, அனாதி காலம், ஆதி காலம், மத்திய காலம் மற்றும் இந்த இறுதி காலத்திலும் கூட உயர்ந்தவர்களாக, சிரேஷ்டமானவர்களாக இருக்கின்றீர்கள். இந்தளவு போதை இருக்கின்றதா? இந்த நினைவை எமர்ஜ் செய்திடுங்கள் (வெளிப்படுத்துங்கள்) என்று பாப்தாதா கூறுகின்றார்கள். மனதில், புத்தியில் இந்த பிராப்தியை மீண்டும் மீண்டும் கொண்டு வாருங்கள். எந்தளவு நினைவை எமர்ஜ் ரூபத்தில் வைத்திருப்பீர் களோ, அந்தளவு நினைவினால் ஆன்மீக போதை ஏற்படும். மகிழ்ச்சி இருக்கும், சக்திசாலியாக ஆகுவீர்கள். இந்தளவு உயர்வான ஆத்மா ஆகியிருக்கின்றீர்கள். நாம் தான் உயர்வானவர்களாக, சிரேஷ்டமானவர்களாக ஆகியிருந்தோம், ஆகியிருக்கின்றோம் மற்றும் சதா ஆகிக்கொண்டே இருப்போம் என்ற இந்த நம்பிக்கை உறுதியாக உள்ளதா? போதை உள்ளதா? உறுதியான நம்பிக்கை உள்ளதென்றால் கையை உயர்த்துங்கள். டீச்சர்களும் உயர்த்தியுள்ளார்கள்.

தாய்மார்கள் சதா குஷி என்ற ஊஞ்சலில் ஆடுகின்றார்கள், ஆடுகின்றீர்கள் அல்லவா! தாய்மார் களுக்கு மிகுந்த போதை இருக்கிறது, என்ன போதை இருக்கிறது? நமக்காக தந்தை வந்திருக் கின்றார். போதை இருக்கின்றது அல்லவா! துவாபரயுகத்தில் இருந்து அனைவரும் கீழே வீழ்த்தினார்கள், ஆகையினால், தந்தைக்கு தாய்மார்கள் மீது மிகுந்த அன்பு உள்ளது மற்றும் குறிப்பாக தாய்மார்களுக்காக தந்தை வந்திருக்கின்றார். மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக் கின்றீர்கள், ஆனால், சதா மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இப்பொழுது கையை உயர்த்தி இருக்கின்றீர்கள் மற்றும் இரயிலில் செல்லும்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக போதை இறங்கிக் கொண்டே செல்கிறது என்பது கூடாது, சதா ஏக்ரஸ், அழிவற்ற போதை இருக்க வேண்டும். சில நேரங்களில் மட்டும் போதையுடன் இருப்பது அல்ல, சதா காலத்திற்குமான போதையானது எப்பொழுதும் மகிழ்ச்சியை வழங்கிக் கொண்டே இருக்கின்றது. தூரத்தில் இருந்து பார்க்கும் பொழுதே ஆன்மிக ரோஜா மலராக தாய்மார்களாகிய உங்களுடைய முகம் சதா தென்பட வேண்டும். ஏனென்றால், தாய்மார்கள் ஆன்மிக ரோஜா மலருக்கு சமமாக சதா மலர்ந்த மலராக இருக்கின்றார்கள், மேலும், தாய்மார்கள் தான் பொறுப்பை ஏற்றுள்ளார்கள், தாய்மார்கள் இவ்வளவு பெரிய காரியத்தை செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்ற இந்த விசயமே இந்த விஷ்வ வித்யாலயத்தில் அனைவருக்கும் பிடிக்கிறது, விசேஷமாகத் தென்படுகிறது. மகாமண்ட லேஷ்வரராக இருக்கின்றார்கள், ஆனால், அவர்கள் கூட தாய்மார்கள் நிமித்தமாகி இருக்கின்றார்கள் மேலும், அப்பேற்பட்ட சிரேஷ்ட காரியத்தை சகஜமாக நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை புரிந்திருக்கின்றார்கள். தாய்மார்களுக்கான பழமொழி உள்ளது - அது உண்மை இல்லை, ஆனால், இரண்டு தாய்மார்கள் இணைந்து ஏதாவதொரு காரியம் செய்வதென்பது மிகவும் கடினமானதாகும் என்ற பழமொழி உள்ளது. ஆனால், இங்கே யார் நிமித்தமாக இருக்கின்றார்கள்? தாய்மார்கள் தான் இருக்கின்றார்கள் அல்லவா! எப்பொழுதெல்லாம் சந்திக்க வருகின்றார்களோ, என்ன கேட்கின்றார் கள்? தாய்மார்கள் நடத்துகின்றார்களா, தங்களுக்குள் சண்டைபோடுவது இல்லையா? சண்டை சச்சரவு ஏற்படுவதில்லையா? என்று கேட்கின்றார்கள். ஆனால்,

அவர்களுக்கு என்ன தெரியும், இவர்கள் சாதாரண தாய்மார்கள் இல்லை, இவர்கள் பரமாத்மா மூலம் உருவாகியுள்ள ஆத்மாக்கள், தாய்மார்கள் ஆவார்கள். பரமாத்ம வரதானம் இவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது. தாய்மார் களுக்கு புகழ் உள்ளது, நமக்கு இல்லையே என்று சகோதரர்கள் (பாண்டவர்கள்) நினைக்கின்றீர்களா என்ன? உங்களுக்கும் கூட 5 பாண்டவர்கள் என்ற மகிமை உள்ளது. சக்திகளின் கூடவே, 7 கன்னியரைக் காண்பிக்கின்றனர் (சீதளா தேவி.....) என்றால் ஒரு பாண்டவரையும் காண்பித் திருக்கின்றனர். மேலும், பாண்டவர்கள் இல்லாமல் தாய்மார்கள் நடத்த முடியாது, தாய்மார்கள் இல்லாமல் பாண்டவர்கள் நடத்த முடியாது. இரண்டு புஜங்களும் வேண்டும், ஆனால், தாய்மார்களை மிகவும் கீழே வீழ்த்திவிட்டார்கள் அல்லவா, ஆகையினால், தந்தை தாய்மார்களை, உலகத்தினர் எது அசம்பவம் என்று நினைக்கின்றார்களோ, அதை சம்பவமாக்கி காண்பித்துக் கொண்டிருக்கின்றார். தாய்மார்களைப் பார்த்து குஷி அடைகின்றீர்கள் தானே? அல்லது இல்லையா? மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் தானே! ஒருவேளை, தாய்மார்களை தந்தை நிமித்தமாக ஆக்கவில்லை என்றால் புதுமையான ஞானம், புதுமையான அமைப்பாக இருக்கும் காரணத்தினால் பாண்டவர்களைப் பார்த்து மிகுந்த சலசலப்பு ஏற்படும். தாய்மார்கள் கேடயம் ஆவார்கள், ஏனென்றால், புதுமையான ஞானம் அல்லவா. புதிய விசயங்களாக உள்ளன. ஆனால், சகோதரி களுடன் கூடவே சகோதரர்கள் எப்பொழுதுமே துணையாக இருக்கின்றீர்கள். பாண்டவர்கள் தங்களுடைய காரியத்தில் முன்னே இருக்கின்றீர்கள் மற்றும் சகோதரிகள் தங்களுடைய காரியத்தில் முன்னே இருக்கின்றீர்கள். இருவருடைய கருத்துக்களால் ஒவ்வொரு காரியமும் தடையற்றதாகி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

பாப்தாதா தினமும் குழந்தைகளுடைய விதவிதமான காரியத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள். புதிய புதிய திட்டங்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. நேரமோ அனைவருக்கும் நினைவில் உள்ளது. நினைவு உள்ளதா? 99ஆம் வருடம் முடிந்துவிட்டது அல்லவா! என்ன நினைத்துக் கொண்டு இருந்தீர்கள், 99ஆம் வருடம் வந்துவிட்டது, 99ஆம் வருடம் வந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டு இருந்தீர்கள். ஆனால், உங்கள் அனைவருக்கும் சேவை செய்வதற்கான வருடம், தடையற்றவராக இருப்பதற்கான வருடம் கிடைத்துள்ளது. பாருங்கள், 99-இல் தான் மௌன பட்டிகள் செய்து கொண்டே இருக்கின்றீர்கள் அல்லவா! உலகத்தினர் பயந்து கொண்டிருக்கின்றார்கள் மற்றும் நீங்கள், எந்தளவு அவர்கள் பயப்படுகின்றார்களோ, அந்தளவு நீங்கள் அனைவரும் நினைவின் ஆழத்தில் சென்று கொண்டிருக்கின்றீர்கள். மனதின் மௌனம் இருக்கத் தான் செய்கிறது, ஞானக் கடலின் ஆழத்தில் செல்ல வேண்டும் மற்றும் புதுப்புது அனுபவங்களின் இரத்தினங்களைக் கொண்டு வரவேண்டும். பாப்தாதா முன்பே சமிக்ஞை என்ன கொடுத்திருக்கின்றார்கள் - அனைத்தையும் விட பெரிய பொக்கிஷம், எது நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை உருவாக்குகின்றதோ, அது தான் சிரேஷ்ட சங்கல்பம் என்ற பொக்கிஷம் ஆகும். சங்கல்ப சக்தி மிகப் பெரிய சக்தி ஆகும், அந்த சிரேஷ்ட சங்கல்பத்தின் சக்தி குழந்தைகளாகிய உங்களிடத்தில் உள்ளது. சங்கல்பமோ அனைவருக்கும் வருகின்றது, ஆனால், சிரேஷ்ட சக்தி, சுபபாவனை, சுப விருப்பம் நிறைந்த சங்கல்ப சக்தி, மனம், புத்தியை ஒருமுகப்படுத்து வதற்கான சக்தி - இது உங்களிடம் தான் உள்ளது. மேலும்,

எந்தளவு முன்னேறிக் கொண்டே செல்வீர்களோ, அந்தளவு இந்த சங்கல்ப சக்தியை சேமிப்பு செய்து கொண்டே செல்வீர்கள், வீணாக இழக்க மாட்டீர்கள், வீணாக இழப்பதற்கான முக்கிய காரணம் வீணான சங்கல்பம் ஆகும். பெரும்பான்மை யான குழந்தைகளிடம், முழு நாளில், இப்பொழுது கூட வீணான சங்கல்பம் வருகின்றது என்பதை பாப்தாதா பார்த்தார்கள். ஸ்தூல செல்வத்தை சிக்கனமாக பயன்படுத்து பவர்கள் எப்பொழுதுமே சம்பன்னமாக இருக்கின்றார்கள் மற்றும் வீணாக்குபவர்கள் எங்கேயாவது ஏமாற்றத்தை அடைகின்றார்கள். அப்பேற்பட்ட சிரேஷ்டமான சுத்தமான சங்கல்பத்தில் அவ்வளவு சக்தி உள்ளது, அது உங்களுடைய கேட்சிங் பவரை (கிரஹிக்கும் சக்தியை), அதிர்வலைகளை கிரஹிக்கக் கூடிய சக்தியை மிகவும் அதிகரிக்கச் செய்யும். இந்த வயர்லெஸ், இந்த தொலைபேசி . . . எவ்வாறு இந்த அறிவியல் சாதனங்கள் காரியங்கள் செய்கின்றனவோ, அவ்வாறு இந்த சுத்த சங்கல்பம் என்ற பொக்கிஷமானது, அப்பேற்பட்ட காரியம் செய்யும், அது லண்டனில் அமர்ந்திருக்கும் ஏதாவதொரு ஆத்மாவினுடைய அதிர்வலைகளை தெளிவாக கிரஹிக்கச் செய்யும். எவ்வாறு இந்த வயர்லெஸ் அல்லது தொலைபேசி, டி.வி, இம்மாதிரி என்னவெல்லாம் சாதனங்கள் உள்ளனவோ . . .எத்தனை சாதனங்கள் வெளிப்பட்டிருக்கின்றன, இவற்றை விட தெளிவாக உங்களுடைய கிரஹிக்கும் சக்தி, ஏகாக்ரதா (ஒருமுகப்படுத்தும்) சக்தி மூலம் அதிகரிக்கும். இந்த ஆதாரங்களோ முடிவடைந்து போகும். இந்த சாதனங்கள் அனைத்தும் எதன் ஆதாரத்தில் உள்ளன? ஒளியின் ஆதாரத்தில் உள்ளன. சுகத்திற்கான சாதனங்கள் என்னவெல்லாம் உள்ளனவோ, அவை பெரும்பாலும் ஒளியின் ஆதாரத்தில் தான் உள்ளன. ஆகவே, உங்களுடைய ஆன்மிக ஒளி, ஆத்ம ஒளி இந்த காரியம் செய்ய முடியாதா என்ன! யார் வேண்டுமானாலும் அருகாமையிலுள்ள, தூரத்திலுள்ள அதிர்வலை களை கிரஹிக்க முடியும். இப்பொழுது என்ன உள்ளது, ஒருமுகப்படுத்தும் சக்தி - மனம், புத்தி ஆகிய இரண்டுமே ஒருமுகப்பட வேண்டும், அப்பொழுது கிரஹிக்கும் சக்தி வரும். மிகுந்த அனுபவம் செய்வீர்கள். சுயநலமற்ற, சுத்தமான, தெளிவான சங்கல்பம் செய்யும்பொழுது, அது மிகவும் வேகமாக அனுபவம் செய்விக்கும். அமைதி சக்திக்கு முன்னால் இந்த அறிவியல் தலை வணங்கும். இப்பொழுதும் கூட அறிவியலிலும் கூட, ஏதோ ஒன்று விடுபட்டுள்ளது, அதை நிரப்ப வேண்டும் என்று புரிந்திருக்கின்றனர். ஆகையினால், கடைசி நிலை, கடைசி சேவை - இந்த சங்கல்ப சக்தியானது மிகவும் வேகமாக சேவை செய்விக்கும் என்பதை பாப்தாதா மீண்டும் அடிக்கோடிட வைக்கின்றார்கள். ஆகையினால், சங்கல்ப சக்தியின் மீது மேலும் கவனம் கொடுங்கள். சிக்கனப்படுத்துங்கள், சேமிப்பு செய்யுங்கள். மிகவும் பயன்படும். இந்த சங்கல்ப சக்தி யினாலேயே பிரயோகி ஆகுவீர்கள். விஞ்ஞானத்திற்கு மகத்துவம் ஏன் உள்ளது? பிரயோகத்தில் (பயன்பாட்டில்) வருகின்றது, ஆகையினாலேயே அனைவரும் ஆம், அறிவியல் நன்றாக வேலை செய்கிறது என்று புரிந்திருக்கின்றார்கள். அமைதியின் சக்தியை பிரயோகம் செய்வதற்காக ஒருமுகப்படுத்தும் சக்தி தேவை மற்றும் ஒருமுகப்படுத்துவதற்கான மூல ஆதாரமாக இருப்பது - மனதின் கட்டுப்படுத்தும் சக்தி, இதன் மூலம் மனோபலம் அதிகரிக்கின்றது. மனோபலத்திற்கு மிகுந்த மகிமை உள்ளது, இந்த ரித்தி, ஸித்தி செய்பவர்கள் கூட மனோபலத்தின் மூலம் அல்பகாலத்திற்காக அற்புதத்தை காண்பிக்கின்றார்கள். நீங்களோ விதிப்பூர்வமானவர்கள், ரித்தி, ஸித்தி செய்பவர்கள் அல்ல, விதிப்பூர்வமாக நன்மை நிறைந்த அற்புதத்தைக்

காண்பிப்பீர்கள், அது வரதானமாக ஆகிவிடும், ஆத்மாக்களுக்காக இந்த சங்கல்ப சக்தியின் பிரயோகம் வரதானமாக நிரூபணம் ஆகிவிடும். எனவே, முதலில் மனதை கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்படுத்தும் சக்தி உள்ளதா? என்பதை சோதனை செய்யுங்கள். ஒரு நொடியில் எவ்வாறு அறிவியலின் சக்தி, சுவிட்சின் ஆதாரத்தினால், சுவிட்சை ஆன் செய்யுங்கள், சுவிட்சை ஆஃப் செய்யுங்கள் - அவ்வாறு ஒரு நொடியில் மனதை எங்கு விரும்புகின்றீர்களோ, எப்படி விரும்புகின்றீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகின்றீர்களோ, அந்தளவு கட்டுப்படுத்த முடிகிறதா? தனக்காகவும் மற்றும் சேவைக்காகவும் மிகவும் நல்ல நல்ல வெற்றி ரூபம் தென்படும். ஆனால், சங்கல்ப சக்தியினுடைய சேமிப்பு கணக்கின் மீது இப்பொழுது சாதாரண கவனம் உள்ளது என்பதை பாப்தாதா பார்க்கின்றார்கள். எந்தளவு வேண்டுமோ அந்தளவு இல்லை. சங்கல்பத்தினுடைய ஆதாரத்தில் பேச்சு மற்றும் கர்மம் தானாக வந்துவிடுகின்றது. இன்று வார்த்தையைக் கட்டுப்படுத்துங்கள், இன்று திருஷ்டியை கவனத்தில் கொண்டு வாருங்கள், உழைத்திடுங்கள், இன்று உள்ளுணர்வை கவனத்துடன் மாற்றம் செய்யுங்கள் என்று தனித்தனியாக உழைப்பதற்கான அவசியமே இல்லை. ஒருவேளை, சங்கல்ப சக்தி சக்திசாலியாக இருக்கிறதென்றால் இந்த அனைத்தும் தானாகவே கட்டுப்பாட்டில் வந்துவிடு கின்றன. உழைப்பிலிருந்து தப்பித்துவிடுவீர்கள். எனவே, சங்கல்ப சக்தியின் மகத்துவத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த பட்டிகள் விசேஷமாக இதற்காகவே வைக்கப்படுகின்றன, அது பழக்கமாக ஆகிவிட வேண்டும். இங்கே ஏற்பட்ட பழக்கத்தை எதிர்காலத்திலும் கூட கவனம் கொடுத்து செய்து கொண்டே இருக்க வேண்டும், அப்பொழுது அது அழிவற்றதாகிவிடும். புரிந்ததா. என்ன மகத்துவம் உள்ளது? உங்களிடம் பெரிய உயர்ந்ததிலும் உயர்ந்த பொக்கிஷத்தை தந்தை கொடுத்துள்ளார். இந்த சிரேஷ்ட சங்கல்பம், சுபபாவனை, சுபவிருப்பம் நிறைந்த சங்கல்பம் என்ற பொக்கிஷம் உள்ளதா? அனைவருக்கும் தந்தை கொடுத்திருக்கின்றார், ஆனால், சேமிப்போ வரிசைக்கிரமமாக செய்கின்றீர் கள் மற்றும் அதைப் பயன்படுத்தும் சக்தியும் வரிசைக்கிரமமாக உள்ளது. இப்பொழுது கூட சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தை பிரயோகம் செய்தீர்களா? விதிப்பூர்வமாக செய்வதனால் வெற்றிக்கான அனுபவம் ஏற்படுகிறதா? இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் ஏற்படுகிறது. இறுதியில் உங்களுடைய சங்கல்ப சக்தி அந்தளவு மகான் ஆகிவிடும் - சேவையில் வாய் மூலம் செய்தி கொடுப்பதில் நேரத்தையும் செலவு செய்கின்றீர்கள், செல்வத்தையும் ஈடுபடுத்துகின்றீர்கள், குழப்பத்திலும் வருகின்றீர்கள், களைப்பும் அடைகின்றீர்கள் . . . ஆனால், சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் செய்யும் சேவையினால் இவை அனைத்தும் சேமிப்பாகிவிடும். அதிகப்படுத்துங்கள். இந்த சங்கல்ப சக்தியை அதிகரிப்பதினால் பிரத்யட்சதாவும் சீக்கிரம் ஏற்படும். இப்பொழுது 62, 63 வருடங்கள் ஆகிவிட்டன, இவ்வளவு சமயத்தில் எத்தனை ஆத்மாக்களை உருவாக்கியிருக் கின்றீர்கள்? 9 இலட்சம் கூட முழுமை அடையவில்லை. மேலும், முழு உலகத்திற்கும் செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டுமென்றால் எத்தனை கோடி ஆத்மாக்கள் உள்ளனர்? இப்பொழுது வரை கூட பகவான் இவர்களுடைய ஆசிரியராக இருக்கின்றார், பகவான் இவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்றார், செய்விக்கக் கூடிய பரமாத்மா செய்வித்துக் கொண்டிருக்கின்றார் . . . இது தெளிவாகத் தெரியவில்லை. நல்ல காரியமாக

உள்ளது மற்றும் சிரேஷ்ட காரியம் செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்ற சப்தமோ உலகத்தினர் சொல்கின்றனர், ஆனால், செய்விப்பவர் இப்பொழுதும் கூட மறைமுகமாக உள்ளார். ஆகவே, இந்த சங்கல்ப சக்தியின் மூலம் ஒவ்வொருவருடைய புத்தியை மாற்றம் செய்ய முடியும். ஓஹோ பிரபு என்று சொல்லி பிரத்யட்சம் ஆகலாம் அல்லது தந்தையாகப் பிரத்யட்சம் ஆகலாம். எனவே, சங்கல்ப சக்தியை அதிகப்படுத்துங்கள் மற்றும் பயன்படுத்திக் கொண்டே இருங்கள் என்று பாப்தாதா இப்பொழுது கூட மீண்டும் கவனத்தை ஏற்படுத்துகின்றார்கள். புரிந்ததா.

மனம் ஒருநொடியில் ஒருமுகப்பட வேண்டும் என்ற பயிற்சியை பாப்தாதா கூறியிருக்கின்றார்கள், ஏனென்றால், பிரச்சனை திடீரென்று வருகிறது மற்றும் அந்த சமயம் ஒருவேளை மனோபலம் இருக்கிறது என்றால் பிரச்சனை சமாப்தி ஆகிவிடுகிறது. ஆனால், பிரச்சனை ஒரு பாடத்தை கற்றுக் கொடுக்கக் கூடியதாக ஆகிவிடுகின்றது. ஆகையினால், அனைவரும் மனம், புத்தியை இப்பொழுதே ஒருமுகப்படுத்துங்கள். ஒருமுகமாகிறதா என்று பாருங்கள். (டிரில்) இவ்வாறு முழு நாளில் பயிற்சி செய்து கொண்டே இருங்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, முதல், இடை மற்றும் கடைசியில் சிரேஷ்ட பாகத்தை நடிக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா தன்னுடைய சிரேஷ்ட சங்கல்பத்தின் விதியை அனுபவம் செய்யக்கூடிய, சதா சகஜயோகியின் கூடவே பிரயோகி ஆகக்கூடிய, சதா சங்கல்பத்தின் சக்தி மூலம் சர்வ சக்திகளை அதிகரிக்கக்கூடிய, மனம் மற்றும் புத்தியின் மீது கட்டுப்பாடு கொண்டிருக்கக் கூடிய, சதா பிரயோகி குழந்தை களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

உள்நாடு, அயல்நாட்டினுடைய குழந்தைகளையும் பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். சங்கல்பத்தின் மூலம் என்ன அன்பு நினைவுகள் மற்றும் ஆன்மிக உரையாடல் செய்கின்றார்களோ, அது பாப்தாதாவிடம் வந்தடைகின்றது. இப்பொழுது கூட யார் விஞ்ஞான சக்தி மூலம் கேட்டுக் கொண்டு இருக்கின்றீர்களோ, அந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒவ்வொரு நாட்டினுடைய ஒரு ஒரு குழந்தைக்கும் அன்பு நினைவுகள் கொடுக்கின்றார்கள். ஜனக் குழந்தைக்கும் கூட விசேஷமாக பாப்தாதா அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள், ஏனென்றால் மனதால் இங்கு இருக்கின்றார், உடலால் அங்கு இருக்கின்றார். ஆகையினால், அனைவருக்கும், ஒவ்வொருவருக்கும் விசேஷ அன்பு நினைவுகள். நல்லது, யோக பட்டிக்கான நிகழ்ச்சி மிகவும் நன்றாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

(தாதிகளுடன்) சதா தன்னை பாப்தாதாவினுடைய கண்ணின் ஒளி எனப் புரிந்திருக்கின்றீர்கள் அல்லவா? கண்களில் சதா நிறைந்திருக்கின்றீர்கள், கண்களில் நிறைந்திருப்பதனால் எப்பொழுதுமே பார்வையில் நிறைந்தே இருப்பீர்கள். இது கூட தந்தை மற்றும் குழந்தைகளினுடைய சங்கம யுகத்தின் மகிழ்ச்சிக்கான விசயம் ஆகும். சந்திப்பது, கேட்பது, சாப்பிடுவது, குடிப்பது, இவை சங்கம யுகத்தின் மகிழ்ச்சியான விசயம் ஆகும். அவ்வாறு மகிழ்ச்சியை கொண்டாடி கொண்டாடி தன்னுடைய வீட்டிற்குச் சென்றுவிடுவீர்கள். பிறகு, இராஜ்யத்தில் வருவீர்கள். பிரம்மா பாபாவுடன் சேர்ந்து இராஜ்யம் செய்ய வேண்டும். நல்லது. உலகத்தினர் யோசித்துக் கொண்டு இருக்கின்றார் கள்

மற்றும் நீங்கள் சதா கொண்டாடிக் கொண்டிருக்கின்றீர்கள். என்ன ஆகும், எப்படி நடக்கும்? என்ற எந்த யோசனையும் இல்லை. எந்தவிதமான சிந்தனையும் இல்லை. நல்லது.

வரதானம் : இந்தக் கடைசி பிறவியில் கிடைத்துள்ள அனைத்து சக்திகளையும் பயன்படுத்தக் கூடிய மனோசக்தி நிறைந்தவர் ஆகுவீர்களாக.

இந்த இனிமையான நாடகம் மிகவும் நன்றாக உருவானதாக, உருவாக்கப்பட்டதாக இருக்கின்றது, இதை எவரும் மாற்ற முடியாது. ஆனால், நாடகத்தில் இந்த சிரேஷ்ட பிராமண பிறவிக்கு நிறைய சக்திகள் கிடைத்திருக்கின்றன. தந்தை வில் செய்திருக்கின்றார் (கொடுத்திருக் கின்றார்), ஆகையினால், வில்பவர் (மனோசக்தி) உள்ளது. இந்த சக்தியை பயன்படுத்துங்கள் - எப்பொழுது விரும்புகின்றீர்களோ, இந்த சரீரத்தின் பந்தனத்தில் இருந்து விடுபட்டு கர்மாதீத நிலையில் நிலைத்துவிடுங்கள். விடுபட்டு இருக்கின்றேன், எஜமானன் ஆவேன், தந்தை மூலம் நிமித்த ஆத்மாவாக இருக்கின்றேன் - இந்த நினைவின் மூலம் மனம், புத்தியை ஒருமுகப்படுத் துங்கள் அப்பொழுதே மனோசக்தி நிறைந்தவர் என்று கூறமுடியும்.

சுலோகன்: உள்ளப்பூர்வமாக சேவை செய்தீர்கள் என்றால் ஆசீர்வாதங்களின் கதவு திறந்துவிடும்.

குறிப்பு:- இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சர்வதேச யோக தினம் ஆகும். பிரம்மாவின் குழந்தைகள் அனைவரும் குழுவாக மாலை 6.30 முதல் 7.30 மணி வரை விசேஷமாக தன்னுடைய பூர்வஜ் சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும், முழு விருட்சத்திற்கும் சக்திகளை தானமாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவையும் தனக்கு முன்னால் கொண்டு வந்து அன்பு நிறைந்த திருஷ்டி கொடுக்க வேண்டும், தன்னுடையவர் என்ற அனுபவத்தை ஏற்படுத்த வேண்டும்.